1969 செப்டம்பர் 12] [பேரவைத் தலைவர்]

"மைசூர் மாநிலத்தில் காவேரிப் பாசனத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், அணைக்கட்டுத் திட்டங்களைத் தீவிரமாக நிறைவேற்றுவது என மைசூர் அரசு முடிவு எடுத்திருப்பதால் அதனல் தமிழ் நாட்டில் எதிர்காலத்தில் பாசன சம்பந்தமாக ஏற்படக் கூடிய சிக்கல்களையும் அபாயத்தையும் பற்றி விவாதிக்க" பேரவையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்கவேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள்,

"மைசூர் அரசாங்கம் நமது மாநிலத்துக்கு வருகின்ற காவிரி நதியின் குறுக்கே மைசூர் மாநிலத்தில் பல அணைகள் கட்ட திட்டமிட்டிருப்பதால், நமது மாநிலத்திற்குக் கிடைக்கும் தண்ணீரின் அளவு குறைந்து விடுவதால் ஏற்பட்டுள்ள அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையைப் பற்றி விவாதிக்க" பேரவையின் இதர அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் இதைப்பற்றி ஒரு மணி நேர விவாதம் வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது இங்கே இல்லை. அவர்கள் வந்தவுடன், அலுவல் ஆய்வுக்குழுவில், இதைப்பற்றி ஏதாவது விவாதம் நடத்தவேண்டுமா, அல்லது ஒரு அறிக்கையைப் பேரவையின் முன்வைத்து, அந்த அளவோடு திருப்தி அடைந்துவிடலாமா என்பதைப்பற்றி விவாதம் செய்யலாம் என்று இருக்கிறேன். ஆகவே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் இப்பொழுது தேவையில்லை என்று கூறி, அனுமதி தர மறுக்கிறேன்.

(உ) கோவில்பட்டி, சாத்தூர் வட்டாரத்திலுள்ள சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளித்து வந்த விற்பனை வரி விலக்கை நீக்கியதும் அதன் விளைவுகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"கோவில்பட்டி, சாத்தூர் வட்டாரத்திலுள்ள சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1968 மார்ச்சு வரை அளித்து வந்த விற்பனை வரி விலக்கை நீக்கி விட்டதால், இரட்டை விற்பனையால் சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு 6—9—1969 முதல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, தொழிற்சாலை நடத்த முடியாத நிலை இருப்பதால், மீண்டும் மேற்படி சங்கங்களுக்கு விற்பனைவரி விலக்களிக்க

வேண்டும் என்ற அவசரப் பொது முக்கியமான விஷயத்தை விவாதிக்க பேரவையின் அலுவல்களை ஒற்றிவைக்கவேண்டும்" என்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த விஷயம் அரசாங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்கு உட்பட்டிருக்கும் காரணத்தினால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை தேனாம்பேட்டையில் ஏற்பட்ட தீ விபத்தும், நிவாரண நடவடிக்கைகளும்.

DR. H. V. HANDE: Sir, I call the attention of the Hon. Minister for Finance to a matter of urgent public importance, viz., the outbreak of a major fire accident in Giriappa Road and Sathyamurthy Nagar in Teynampet (Madras City) on the morning of 19th August 1969 destroying nearly 150 huts and taking the life of one woman and a ten month old child, and the need to institute immediate relief measures and rehabilitate the affected persons.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, A fire accident took place at 10-30 a.m. on 19th August 1969 at Giriappa Road and Satyamurthy Nagar in T. Nagar area of Madras City. Hundred and fifty-two huts were gutted by the fire, and 291 families were rendered homeless. Thirumathi Kanaka, aged 20 and her six month old female child died in the fire accident.

The Mayor, Corporation of Madras, the Collector of Madras and the Commissioner, Corporation of Madras inspected the scene of the fire accident and ordered for the immediate relief measures to be taken. On the same day evening at 4-45 p.m., the Governor and his wife visited the fire affected area. The Governor sanctioned a sum of Rs. 6,000 from the Prime Minister's Relief Fund for the supply of clothes to the fire affected victims and the Governor's wife distributed clothes to the fire affected victims.

As a measure of relief, a cash grant of Rs. 80 was sanctioned to each victim by the Collector of Madras, while the Red Cross Society sanctioned Rs. 20 to each of those whose huts have been affected by fire and Rs. 60 to the family of those who lost their lives in the fire. A total sum of Rs. 14,980 has been granted towards relief measures. As the lands, where the fire accident took place, are said to be Government's lands, the Governor suggested that fire-proof tenements should be cocnstructed in this place. There is a proposal before the Government to construct fireproof tenements in Giriappa Road, T. Nagar.